19 வது மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை

அசல் வழக்கு எண்.272/2023

P.W.1

பெயர் – R.ஆனந்த் குமார்

தந்தை பெயர் – ரத்தினசாமி நாடார்

வயது – 58

நாள் – 18.03.2024

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

(சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது)

1.எனக்கு திருமணம் நடந்தது, எனக்கு குழந்தைகள் இல்லை. ரத்தினசாமி நாடாருக்கும், ராஜம்மாளுக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் என்னுடன் சேர்த்து 6 குழந்தைகள் ஆகும். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் மயிலாப்பூரில் உள்ள P.S.உயர்நிலைப்பள்ளியில் படித்தேன். நான் தற்போது ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். நான் சுமார் 20 வருடங்களாக ஆட்டோ ஓட்டி வருகிறேன்.

2.விஜயா மளிகைக் கடை எந்த முகவரியில் நடந்துவந்தது என்றால் பரிபூரண விநாயகர் கோவில் தெரு, மயிலாப்பூர் என்ற முகவரியில் நடந்தது. மேற்படி கடையை எனது தாத்தா மேடைக்கடை நாடார் என்பவர் ஆரம்பித்தார். மேற்படி கடை எனது தாத்தாவிற்கு சொந்தமானது என்பதை காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அசல் ஆவணங்கள் கிடைக்கவில்லை, ஆவணங்களின் நகல்களை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விஜயா மளிகை கடையில் சுமார் 12 நபர்கள் வேலை செய்துள்ளார்கள். மேற்படி பணிபுரிந்தவர்களின் விவரங்களை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி விஜயா மளிகை கடை எப்போது தொடங்கப்பட்டது என்றால் எனக்கு நினைவு தெரிந்த தேதியிலிருந்து நடந்து வருகிறது. எனது அப்பா ரத்தினசாமி மேற்படி கடையில் வேலை செய்து வந்தார். மேற்படி கடையின் வரவு, செலவுகளை தணிக்கையாளர் பார்த்து வந்தார்.

3.மேடைக்கடை நாடாருக்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் ஒரு ஆண் குழந்தை உள்ளனர். மேடைக்கடை நாடாருக்கு எழுதப்படிக்கத் தெரியும். மேற்படி மேடைக்கடை நாடார் எந்த முகவரியில் வசித்து வந்தார் என்றால் கதவு எண்.12/6, ராக்கியப்பர் தெரு, முதல் தெரு, மயிலாப்பூர், சென்னை – 4 என்ற முகவரியில் வசித்து வந்தார். மேற்படி முகவரியில் மொத்தம் 7 வீடுகள் உள்ளது, அதில் கீழ் தளத்தில் உள்ள வீட்டில் மேடைக்கடை நாடார் வசித்து வந்தார். மேற்படி எனது தாத்தா வசித்து வந்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தாவும், பெற்றோர்களும், நாங்களும் மேற்சொன்ன முகவரியில் ஒன்றாக வசித்து வந்தோம். விஜயா மளிகை கடையின் உரிமையாளர் எனது அப்பா என்றும், எனது தாத்தா உரிமையாளர் என்றால் சரியல்ல, எனது தாத்தா தான் காசோலையில் கையொப்பம் செய்வார். மேற்படி

காசோலையில் கையொப்பம் செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, பிரதிவாதியிடம் உள்ளது.

4.வழக்குச் சொத்தை எனது தாத்தா எப்போது வாங்கினார் என்றால் 1967ல் வாங்கினார். நான் 1965 ம் ஆண்டு பிறந்தேன். வழக்குச் சொத்தை 1969ம் ஆண்டு எனது அம்மா பெயருக்கு செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலம் எனது தாத்தா எழுதிக் கொடுத்தார். எனது தாத்தாவிற்கு மூன்று குழந்தைகள் உள்ள நிலையில், எதற்காக எனது அம்மா பெயருக்கு எழுதிக் கொடுத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. விஜயா கடையில் வந்த தொகையை வைத்து, எனது அப்பா எனது அம்மாவின் பெயரில் சொத்தை வாங்குமாறு சொல்லி எனது தாத்தாவிடம் பணம் கொடுத்தார் என்றும், அதனால்தான் எனது அம்மாவின் பெயருக்கு செட்டில்மென்ட் எழுதித் தரப்பட்டது என்றால் இல்லை. நான் ஆட்டோ தொழில் செய்வதற்கு முன்பு, விஜயா மளிகை கடையில் வேலை செய்தேன். மேற்படி விஜயா கடையில் காசாளர் ஆக சுமார் 20 வருடங்கள் வேலை செய்தேன். நான் படித்துக் கொண்டே வேலை செய்தேன்.

5.மேற்படி விஜயா கடை எப்போது, எதனால் மூடப்பட்டது என்றால் கடையிருக்கும் கட்டிடத்தின் உரிமையாளருக்கும், எனது தாத்தாவிற்கும் வழக்கு நடந்தது, மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின்படி கடையை நீதிமன்றத்தின் மூலம் காலி செய்ததால் கடை மூடப்பட்டது, கடை சுமார் 20 வருடங்களுக்கு முன்பு மூடப்பட்டது. மேற்படி விவரத்தை எனது வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது திருமணத்தை எனது அப்பாவும், தாத்தாவும் செய்து வைத்தார்கள். எனது திருமணம் வண்ணார்பேட்டையில் உள்ள கல்யாண மண்டபத்தில் நடந்தது. நான் வழக்குச் சொத்தில் தொடர்ந்து வசிக்கவில்லை என்றும், சிறுவயதில் நான் வழக்குச் சொத்திலிருந்து வெளியேறிவிட்டேன் என்றால் இல்லை.

6.2000 ஆண்டு வரை தாத்தா வழக்குச் சொத்தில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விஜயா கடை மூடிய பிறகு எனது தாத்தா சாக்கு வியாபாரம் செய்து வந்தார். மேற்படி சாக்கு வியாபாரத்தை எனது தாத்தா எந்த முகவரியில் செய்து வந்தார் என்றால் வண்ணாரப் பேட்டை முகவரியில் செய்து வந்தார்.

பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியானது என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

19வது உதவி நீதிபதி